C.C.//4 /2021

PW – 1

பெயர்: மோனிகா

தேதி: 08.10.2024

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

ராமமூர்த்தி என்பவர் என் மாமியார் மற்றும் மாமனாரிடம் அவர்களின் மகனுக்கு ஒரு டாக்டர் பெண்ணை திருமணம் செய்யாமல் ஒரு இன்ஞ்சினியர் பெண்ணை ஏன் திருமணம் செய்து வைத்தீர்கள் என்று கேட்டதால் பிரச்சனை ஆனது. எனது கணவர் மற்றும் எனது மாமியார் மற்றும் மாமனார் மனதில் பெரிய இடத்தை பெண்ணை திருமணம் செய்யலாம் என்று எண்ணம் தோன்றியது. அதனால் என்னை எப்படியாவது வீட்டை விட்டு அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தார்கள். என்னுடைய 110 பவுன் தங்க நகைகளை எனது கணவரும் எனது மாமியாரும் அவர்களை நம்பி நான் கொடுக்க வேண்டும் என்று தினமும் வற்புறுத்தி நிந்தனை செய்தார்கள். நான் எனது கணவர் மற்றும் மாமியாரை நம் குடும்பம் தான் என்று நம்பி எனது நகைகள் அனைத்தையும் எனது மாமியார் கையில் கொடுத்தேன். எனது மாமியார் அவரின் பெயரில் UCO வங்கியில் வைத்திருந்த locker எண் 133 என்ற locker வைத்துக்கொண்டார். நம்பிக்கையின் பெயரில் நான் கொடுத்து வைத்திருந்த நகைகள் ,இன்று வரை திருப்பி தரவில்லை. என் கணவர் என்னை UPSC படிக்க வைக்கிறேன் என்று சொல்லி திருமணம் செய்தார். நான் பார்த்துக்கொண்டிருந்த வேலையையும் விட வைத்துவிட்டார். அதன் மூலம் என்னை அவர்களை சார்ந்து இருக்க வைத்துவிட்டார். அவ்வாறு வேலையை விடாமல் இருந்திருந்தால் கூட நான் தற்போது மாதம் ரூபாய் 2 லட்சம் சம்பளத்தில் வேலை பார்த்துஇருப்பேன். திருமணத்திற்கு பின்பு என் மாமியாரும் என் மாமனாரும் என்னிடம் கல்யாணத்திற்கு பிறகு என்னடி மையிர் வேலை என்று என்னிடம் ஏசினார்கள். என்னை வீட்டு வேலை செய்வதற்காக மட்டும் திருமணம் செய்ததாக சொன்னார்கள். என்னை வேலை அனுப்புகிறேன் படிக்க வைக்கிறேன் என்று சொல்லி என்னை ஏமாற்றி விட்டார்கள். திருமணத்திற்கு பிறகு நான் என் கணவர் என் மாமியார், என் மாமனார், என் நாத்தனார், என் நாத்தனாரின் கணவர் அனைவரும் ஒரே வீட்டில் இருந்தோம். எனக்கும் என் கணவருக்கும் தனியாக வீடு வாங்க வேண்டும் என்று சொல்லி என்னை என் அப்பாவிடம் ரூபாய் 10 லட்சம் வாங்கி வரவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நான் என் கணவருடன் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றால் என் அப்பாவிடம் இருந்து பணம் வாங்கி வரவேண்டுமென்று என் கணவர், மாமனார், மாமியார் சொன்னார்கள். நான் சந்தோஷமாக இருக்கபோகிறோம் என்று நினைத்து கொண்டு என்

அப்பாவிடம் ரூபாய் 10 லட்சம் கேட்டேன். என் அப்பா என் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும்மென்று சௌந்தரராஜான் என்பவரிடம் கடன் வாங்கி ரூபாய் 10 லட்சத்தை எனது மாமியார் கையில் 27.01.2018ம் தேதியில் ரொக்கமாக கொடுத்தார். ஆனால் அந்த பணத்தை வைத்து எங்களுக்கு வீடு வாங்காமல் எனது நாத்தனார் மற்றும் எனது நாத்தனாரின் கணவர் பெயரில் ஒரு Flat வாங்கி விட்டார்கள். நான் எங்களுக்கு வீடு வாங்கவில்லை என்ற கேட்டபோது அதையால்லாம் கேட்க கூடாது என்றும் நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்றும் பிடிக்க வில்லை என்றால் வெளியே போ என்றும் சொன்னார்கள். அப்போது எனக்கு நம்பிக்கை மோசடி செய்துவிட்டார்கள். எனது கணவர் என்னிடம் அவர் MS படித்து முடித்துள்ளதால் கிராமபுறத்தில் வேலைபார்க்கவேண்டும் என்றும் அதை தவிர்க்கவேண்டுமென்றால் ரூபாய் 20 லட்சம் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும் என்னிடம் ஒரு உத்தரவை காண்பித்தார். என் கணவர் என்னிடம் அவர் என்னுடன் சேர்ந்து சந்தோஷமாக இருக்க வேண்டுமென்றால் ரூபாய் 20லட்சத்தை நான் தயார் செய்ய வேண்டுமென்று சொன்னார். நான் என் கணவரிடம் எனது அப்பா தற்போதுதான் ரூபாய் 10 லட்சம் கடன் வாங்கி தந்துள்ளார் என்பதால் பணம் இருக்காது என்றும் அப்பாவிடம் கேட்கிறேன் என்றும் சொன்னேன். என் அப்பாவிடம் கேட்டபோது தற்போது பணம் இல்லை என்றும் எனது கணவர் மற்றும் அவரது குடுமபாத்தாரிடம் பேசுவதாகவும் சொன்னார். எனது கணவர் மற்றும் அவரது குடும்பத்தில் இருந்த அனைவருக்கும் எங்களிடம் பணம் இல்லை என்று தெரிந்துவிட்டது. அதனால் என்னை விரட்டுவதற்காக பல கொடுமைகள் செய்ய ஆரம்பித்தார்கள். என் கணவரை என்னுடன் தாம்பத்திய உறவு வைத்துக்கொள்ள சேர விடாமல் எனது மாமனார், மாமியார் தடை செய்தார்கள். என் கணவர் என்னுடன் பேச ஆரம்பித்தால் மாடியில்இருந்து கீழே என் கணவரை அழைத்து செல்வார்கள். எங்கள் அறை பூட்டி இருந்தாலும் கதவை தட்டி எனது கணவரை அழைத்துசெல்வார்கள். எனது கணவர் இரவு பணிக்கு சென்றிருந்தபோது 10.00 மணியளவில் என் கணவரிடம் சாப்பிடாரா என்று கேட்பதற்காக போன் செய்யும்போது என்னும் படுத்துக்கொள்ளும் என் மாமியார் என் கணவருடன் போனில் பேசக்கூடாது என்று சொன்னார். என் கணவருடன் வாழ்வதற்கு சென்ற வீட்டில் என் கணவருடன் பேசமுடியாத அளவிற்கு எனது மாமியார், மாமனார், நாத்தனார் கொடுமை செய்தார்கள். அதனால் நான் மிகுந்த மனகஷ்டத்திற்கு ஆளாகி விட்டேன். என் கணவருடன் சேரவிடாமல் செய்துவிட்டு எனக்கு குழந்தைஇல்லை என்று சொல்லி, சொல்லி கொடுமை செய்தார்கள். என் உடம்பில் குறை இருக்கும் என்று சொல்லி என் மாமியார் என்னை தினமும் நோகும்படி செய்வார். என்னை நச்சரித்து மருத்துவரிடம் பார்க்க சொல்லிவிட்டு அவ்வாறு மருத்துவரிடம் பேசும் அந்தரங்க விஷயங்களை கூட எனது மாமியார் வந்து கேட்பார். மனதளவில் என்னை உடைக்க வேண்டுமென்று என்னை தனியாக வைக்க ஆரம்பித்தார்.

எனது கணவர், மாமனார், மாமியார், நாத்தனார், நாத்தனாரின் கணவர் ஐந்துபேரும் கன்னட மொழியில் என்னை பார்த்து என்னை பற்றி பேசி சிரித்து

கஷ்டத்திற்கு ஆக்கினார்கள். என்னை வீட்டு காவல் நிலையில் தான் வைத்திருந்தார்கள். என் அப்பா, அம்மாவிடம் நான் பேசுவதை தடைசெய்தார்கள். என் தம்பியிடம் நான் பேசக்கூடாது என்று சொன்னார்கள். என் உறவினார்கள் நண்பர்களை கூட பார்த்து பேசக்கூடாது என்று சொன்னார்கள். என்னை என் கணவரும், கணவர் வீட்டாரும் பேசமால் இருந்துகொண்டு என்னை தனிமையில் வைத்தார்கள். எனது உறவினர்கள் என்னையும் என் கணவரையும் பார்த்து நல்லவிதமாக வெளியே சென்று வரவேண்டும என்று சொல்லும்போதும் என்து மாமனார் மற்றும் மாமியார் வெளியே விடமாட்டார்கள். நான் இதையல்லாம் மீறி என் பெற்றோருக்கோ, என் தம்பிக்கோ போன் செய்தாலும் எனது மாமனார் என்னிடம் எவன் கூட பேசுகிறாய் என்று என்னை அசிங்கமாக பேசினார்.

என் கணவர் நான் வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று சொல்லி என்னிடம் போன் Password, Gmail Password, Bank Accout Password, Whatss App Password எல்லாவற்றையும் என்னிடம் வாங்கி வைத்துக்கொண்டு இரவு நான் தூங்கிய பின்பு அதை முழுவதையும் சோதித்துபார்த்தார். என் கணவர் என்னை எனது பெற்றோர் மற்றும் தம்பியிடம் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கும் நிலையில் நான் Text பண்ணுகிறேன் என்று சொல்லி வீட்டை வீட்டு போ என்று சொன்னார்.

நான் இந்த கொடுமைகளுக்கு பிறகும் வீட்டை விட்டு போகவில்லை என்று அடுத்த படியான கொடுமைகளை ஆரம்பித்தார்கள். எனது மாமனார் என்னிடம் நான் இன்னும் ரூபாய் 20 லட்சம் தயார் செய்யவில்லையை என்றும் தற்போதும் எனது கணவரின் Matrimony ல் இன்னும் பெண்கள் கேட்கிறார்கள் என்றும் என்னை மிரட்டினார். ஒவ்வொரு நாளும் எனது மாமனாரும், மாமியாரும் நீ சேரிக்குடும்பம், நீ பிச்சைக்காரி மாதிரி இருக்கிறாய் என்று என்னை கொடுமை செய்தார்கள். எனக்கு முகத்தில் சிறிதளவில் இருக்கும் முடிகளை பார்த்து நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்றும் என் கணவருடன் வெளியே செல்லக்கூடாது என்றும் சொன்னார்கள். ஒவ்வொரு நாளும் என்னிடம் Status இல்லாத குடும்பத்தில் பெண் எடுத்துவிட்டோம் என்றும் தப்பான பெண் எடுத்துவிட்டோம் என்றும் சொல்லி கொடுமை செய்தார்கள். திருமணத்திற்கு பிறகு நான் சற்று எடை கூடியதால் என்னுடைய துணிகள் எனக்கு அளவு பொருந்தவில்லை. அதற்கு நான் துணி கேட்டதற்கு எனது கணவரிடம் துணியெல்லாம் எதற்கு என்றும் கிழிந்த துணியுடன் விவாகரத்து கொடுத்துவிடு என்றும் பேசினார்கள்.

என் நாத்தனாரின் கணவர் எனது கணவர் மற்றும் எனது மாமனாரிடம் நான் வேறு யாருடன் போன் பேசுவதால் தான் நான் Dull ஆக இருக்கிறேன் என்று சொல்வார். இப்படி என்னுடைய நம்பிக்கையும் என்னுடைய தன்மானத்தையும் அழித்தார்கள். நான் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று சகித்து கொண்டிருந்தேன். 13.06.2018 ம் தேதி எனது அப்பா ஒரு கோவில் பிரசாதம் அனுப்பி வைத்தார். என் அப்பாவுக்கு காசு கொடுக்க வழியில்லாமல் பிரசாதம் அனுப்பிகிறாரா என்று என் அப்பாவையும்

தரக்குறைவாக பேசினார்கள். சாட்சி 11.06.2018 என்று சொன்னார். அன்று இரவு எனது என்னையும், எனது அப்பாவையும், அம்மாவையும், என் கணவர், மாமனார்,மாமியார், நாத்தனார், நாத்தனாரின் கணவர் அசிங்கமாக பேசினார்கள். என்னை தற்கொலை செய்யும் மனநிலைக்கு கொண்டு சென்றார்கள். நான் என் அப்பாவிடம் சொன்னபோது என் அப்பா நான் உயிருடன் வந்தால் போதும் என்று சொன்னார். நான் அந்த வீட்டில்இருந்தால் எனது உயிருக்கு எதுவும் ஆகிவிடும் என்று 12.06.2018ம் தேதி அங்கிருந்து என் அப்பா வீட்டிற்கு வந்தேன். பெரியவர்கள் பேசி சரி செய்வார்கள் என்று நினைத்தேன். 2018 ஆகஸ்ட் 5 ம் தேதி நான் என் அம்மா, அப்பா, என் தாய் மாமா, இரண்டு பெரியப்பா, இரண்டு பெரியம்மா மற்றும் இரண்டு அத்தைகள் பேசுவதற்காக சென்றோம். அதற்கு நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறோம் என்றும் போகவில்லை என்றால் காவல்நிலையத்தில் சொல்லிவிடுவோம் என்றும் என் மாமியாரும், என் மாமனாரும் எங்களை விரட்டிவிட்டார்கள். நான்கொண்டு சென்ற எனது பொருட்களை வெளியே வீசி கேட்டை மூடி விட்டார்கள். எனக்கெல்லாம் வக்காலத்து வருகிறார்கள் என்று அசிங்கமாக பேசினார்கள்.

நேரமின்மை காரணமாக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi